# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

<u>ஆணை நாள் 12.09.2019</u>

**<u>முன்னிலை</u>**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 2323/B/18</u>**

திரு,இரா.சுப்ரமணியன் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மேட்டூர்,
சேலம் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

## <u>ஆணை</u>

இவ்வாணையத்தால் இன்று (12.09.2019) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு,இரா.சுப்ரமணியன் அவர்கள் ஆஜரானார். பொதுத்தகவல் அலுவலர், திரு கே.கருணாகரன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மேட்டூர் வட்டாட்சியர் அலுவலகம், சேலம் மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 02.01.2018 தேதியிட்ட மனுவில், திரு.இராமசாமி கவுண்டர் அவர்களின் மகனாகிய திரு.இரா.சுப்ரமணியம் ஆகிய தான் தன்னுடைய வட்டத்திற்குட்பட்ட சிங்கிரிப்பட்டி வருவாய் கிராமத்தில், பல ஆண்டுகளாக தனக்கு பாத்தியப்பட்ட பட்டா எண் 234, உள்ளடங்கிய புல எண்கள் 54/2, 54/6, 54/7 ஆகியவற்றிற்கான நிலத்தில் வருவாய் ஆவணங்கள் பெற்று விவசாயம் செய்து வருவதாகவும், அதற்கு பிறகு கணினி சிட்டா எடுக்கும்போது மேற்கண்ட புல எண்கள் தனது பெயரில் இருந்து வருவதாகவும், அதற்கு பிறகு கணினி சிட்டா எடுத்துப் பார்த்ததில் தனது பெயர் இல்லாமல் சொத்திற்கு சம்பந்தம் இல்லாத மணி மற்றும் செல்வம் போன்றோர் பெயர்களில் இருந்து வருவதாகவும், மேலும் இது சம்பந்தமாகவே தகவல் கோரி சேலம்

மாவட்டம், மேட்டூர் வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு மனு செய்துள்ளார்.

3. தமக்கு தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர், தான் கோரியுள்ள தகவல்களை தனக்கு பெற்றுத் தருமாறு தெரிவித்து 21.02.2018 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டாட்சியர் அலுவலக மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். மேல்முறையீட்டு மனுவிற்குப் பின்னும் தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர் 26.03.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (12.09.2019) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் ஏற்கனவே 30.01.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாக அவருக்கு தகவல்கள் வழங்கப்பட்டது என்று தெரிவித்து, அதன் நகல்களை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும் மேட்டூர் வட்டாட்சியர் அவர்களின் அறிக்கையினையும் ஆணையத்தில் சமர்ப்பித்து, மனுதாரரின் பட்டா எண் 234ல் ஏற்கனவே இருந்த நான்கு புல எண்களில் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட ச.எண் 54/2, 54/6, 54/7 ஆகிய மூன்று புல எண்களை மட்டும் மனுதாரர் ராமசாமிகவுண்டர் மகன் சுப்ரமணியன் பெயரை பட்டா எண் 234ல் கிராம சிட்டா மற்றும் கணினியில் தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் தன்னை அழைத்து விசாரணை செய்தார்கள் என்றும், தன்னுடைய பட்டா சம்பந்தப்பட்ட உரிய ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்று தன்னிடம் தெரிவித்தார்கள் என்றும், ஆனால் தன்னுடைய பட்டா சம்பந்தப்பட்ட உரிய ஆவணங்கள் தன்னிடம் இல்லை என்றும் ஆணையத்தில் தெரிவித்து, தான் கோரியுள்ள தகவல்களை தனக்கு பெற்று தருமாறு ஆணையத்திடம் வேண்டி கொண்டார்.

6. மேற்சொன்ன ஆவணங்களை பரிசீலிக்கையில், மனுதாரருக்குரிய தகவல்கள் அவருக்கு கிடைக்க வேண்டும் என ஆணையம் கருதி, மேற்படி மனுதாரரின் தகவல் சம்பந்தமான உண்மைதன்மையை, சேலம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் ஆராய்ந்து 20 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று ஆணையம் உத்திரவிட்டு, இவ்வழக்கின் முடிவில் கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுக்கின்றன:-

1. **மனுதாரரின் 02.01.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்கள் தொடர்பாக, சேலம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் மேட்டூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வருகை தந்து, மனுதாரர் கோரியுள்ள தகவல் அடங்கிய ஆவணங்களை தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 18(3)(b)ன்கீழ் ஆய்வுசெய்து, சேலம் வட்டாட்சியர், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் / பொதுத் தகவல் அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர் / துணை வட்டார வளர்ச்சி அலுவலர், மற்றும் மனுதாரரையும் விசாரணைக்கு அழைத்து, விசாரணை மேற்கொண்டு, விசாரணை அறிக்கையை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 20 நாட்களுக்குள் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி பதிவுத் தபாலில்**

அனுப்பி வைத்து, மனுதாரர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலுடன் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவலையும் இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து, சேலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் மூலம் இவ்வாணையத்தில் நடைபெறும் மறுவிசாரணையன்று நேரிடையாக ஆஜராகி சமர்ப்பிக்க ஆணையம் உத்தரவிடுகிறது.

2. வழக்கின் மறுவிசாரணை பிறிதொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும். அன்றைய தின விசாரணைக்கு சேலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் தனது அறிக்கையுடனும் மற்றும் மேட்டூர் வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் தனது அறிக்கையுடனும் ஆஜராக ஆணையம் உத்திரவிடுகிறது.

ஒம்/-ரா.பிரதாப்குமார்
மாநிலத் தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண். SA 2323/B/18**

வருவாய் கோட்டாட்சியர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
சேலம் மாவட்டம்

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மேட்டூர்,
சேலம் மாவட்டம்.

திரு,இரா.சுப்ரமணியன்,
த/பெ.ராமசாமி கவுண்டர்,
கோட்டமடுவு,
சிங்கிரிப்பட்டி (அஞ்சல்),
கொளத்தூர்,
மேட்டூர் வட்டம்,
சேலம் மாவட்டம் - 636 303

Copy to: File / Stock File
SC/PA/16.09.2019